(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே (தொடர்ந்து நின்று கொண்டே இருந்தார்.) உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

7. நடைமுறைக் கேள்விகள்

(அ) ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்ப ஓர் உறுப்பினர் எழுந்துநின்ற போது, அதற்கு வாய்ப்பளிக்காமலேஅடுத்த பொருளை பேரவைத் தலைவர் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டது குறித்து

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டு நின்று கொண்டே இருக்கிறேன். நீங்கள் அதற்குள் வேறு சப்ஜெக்டுக்குப் போய்விட்டீர்கள். ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள் ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார்கள். நான் விளக்கம் கேட்டபோது ஒவ்வொன்றாகக் கேட்டால் பதில் சொல்கிறேன் என்று சொன்னார்கள். அதற்காக நான் கேட்க ஆரம்பித்தேன். அதற்குள் என்னைப் பேசவிடாமல் செய்துவிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் விரும்பினாலும் பேரவைத் தலைவர் மறுக்கலாம். நம்முடைய விதி 41-ல் விளக்கம் பெறுவதற்கு ஒன்று அல்லது இரண்டு கேள்விகள் தான் கேட்கலாம் என்று தெளிவாக இருக்கிறது. அதற்குமேல் அமைச்சரவர்கள் விளக்கம் சொல்லத் தயாராக இருந்தாலும் பேரவைத் தலைவர் மறுக்கலாம். நீங்கள் கேட்டதில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. இராம அரங்கண்ணல் : தலைவரவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியிருக்கிறேன். முன்பெல்லாம் விதி 41-ன் கீழ் விளக்கம் கேட்டால் அதன் மீது எந்தவிதமான பதிலும் சொல்லக் கூடாது என்று விதி இருந்தது. அதன் பிறகு லோக் சபாவில் ரூல் 41 முடிவில் இரண்டு கேள்விகள் மட்டும் கேட்கலாம் என்று வைத்திருப்பதைப் போல நாமும் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி, அந்த முறையில் இரண்டு கேள்விகள் மட்டும் கேட்கலாம் என்று சட்டமன்ற விதி இருக்கிறது. ஆனால் ஹாண்டே அவர்கள் அதை மீறி யிருக்கிறார்கள். தாங்கள் அனுமதி அளிக்கவில்லை என்பதற்காக அதன்மீது ஒரு விவாதத்தையே நடத்துவதுபோல் பேசிக் கொண்டிருக்கிறார். அது சரியா? ரூல் 41 முடிவில் இரண்டு கேள்விகளுக்குமேல் கேட்பது சரியா? இதற்கு தாங்கள் தெளிவான தீர்ப்பை வழங்கிடவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் இப்போது தெளிவாகச் சொன்னேன். அமைச்சர்கள் விரும்பினாலும் பேரவைத் தலைவர் மறுக்கலாம் என்று சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். விதியைப் பொறுத்த வரையில், நான் டிசிப்பிளின்டாகத்தான் கேட்டேன் இரண்டுகேள்விகளுக்கு மேல் நான் கேட்கவில்லை; நான் கேட்ட கேள்விகளைத் தனித்தனியாகக் கேட்டால் பதில் சொல்கிறேன்; இப்போது கேட்டது சரியாக விளங்கவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதனால் ஒவ்வொன்றாகக் கேட்பதற்கு எழுந்தேன். That is repeating the second question itself. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், விதிப்பிர காரம் முறைப்படி கேள்விகள் கேட்டேன். முறைப்படி கேட்டால் இப்படித்தான் நடந்து கொள்வீர்கள் போலிருக்கிறது. கடுமை யாக ஒன்றையும் நான் சொல்லவில்லை. விளக்கம் கேட்டேன். அதற்குக் கூட அனுமதிக்காதது என்னுடைய மனதைப் புண்படுத்து கிறது. ஏதாவது கடுமையாகச் சொன்னால் உங்கள் மனதைப் புண் படுத்துகிறது என்று சொல்கிறீர்கள். நான் ஒரு முக்கியமான பிரச்சனை பற்றிப் பேசும்போது வேகம் வேகமாக அடுத்த சப் ஜெக்டுக்குப் போவது எங்களுடைய மனதைப் புண்படுத் தாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய நோக்கும் போக்கும் எல்லோருக்கும் தெரியும். தயவுசெய்து உட் காருங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : என்னுடைய நோக்கும் போக்கும் உங்களுக்குத் தெரிகிறது. அதைப் போல உங்களுடைய நோக்கும் போக்கும் எங்களுக்குத் தெரிகிறது.

(ஆ) பேரவைத் தலைவர் மீது அவதூறு ஏற்படுகின்ற வகையில் ஓர் உறுப்பினர் பேசியது குறித்து

*திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை. தங்கள் மீது அவதூறு ஏற்படுகிற வகையில் ஒரு வாக்கியத்தை டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர் அப்படிக் குறிப்பிட்டது சரியல்ல. அதனால் அவர்களே அந்த வாக்கியத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் சபாநாயகரைக் காப்பாற்றுவதற்காக இப்படிக் குறிப்பிடுகிறேன் என்று யாரும் எண்ணக் கூடாது. என்னைப் போன்றவர்கள் இப்படிக் கேட்பது, சபாநாயகர் இருக்கக் கூடிய அந்த இடத்தைக் காப்பதற்காகத்தான். அந்த நாற்காலியின்மீது களங்கம் ஏற்படக்கூடாது. அதற்காகத்தான் சொல்கிறேன்.

நாம் எல்லோரும் சில பிரச்சனைகளை ஆட்சேபனைக் குரியவை என்று கருதும்போது அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வதுதான் முறை. ஹாண்டே அவர்கள் வேகமாகப் பேசினார்கள். அவர்கள் திரும்பத் திரும்ப சண்டை போடுவது போல பேசுவது நல்லதல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் ஆட்சேபகரமான வார்த்தை எதையும் சொல்லவில்லையே. பிரச்சனைகளின் முக்கியத் துவத்தைப் பொறுத்து வேகமாகப் பேசுகிறேன். இன்னும் கடுமையாகப் பேசியிருப்பேன். ஆனால் நான் அப்படிப் பேச வில்லை. டிசிப்ளின்ட்டாகத்தான் பேசினேன். நான் கேட்டது புரியவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்காக மீண்டும் கேட்க விரும்பினேன். அதல்லாமல் விதியை மீறி நான் எதையும் சொல்லவில்லை. அமைச்சர் பதில் சொல்லத் தயாராக இருந்தபோதிலும் பேரவைத் தலைவர் அனுமதிக்க வில்லை. ஏன் அனுமதி தரக்கூடாது என்று கேட்டவுடன் சபாநாயகர் ‘ உங்கள் போக்குத் தெரியும் ’ என்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குத் தெரியும். நாம் வள்ளுவர் படத்தை இங்கே வைத்துக் கொண்டிருக்கிறோம். திருக்குறளில் ‘‘ நயனிலன் என்பது சொல்லும் பயனில பாரித் துரைக்கும் உரை ’’ என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்.